# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093621

1. District மாவட்டம்: திண்டுக்கல் PS: காவல்நிலையம் VEAC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 05 Date: நாள் 20.09.19

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended by PC Act(Amendment) 2018 Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 06.09.2019, 18.09.2019 and 19.09.2019
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.09.2019 Time : நேரம் 09.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 30 கி.மீ மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி நகராட்சி அலுவலகம், ஒட்டன்சத்திரம் திண்டுக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. ராமசந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. பாலசண்முகம்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45/2019 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஜராவல்ஸ் ஏஜென்சி (g) Address : முகவரி அருள்மிகு பேக்கரி சந்து, தாராபுரம் ரோடு, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. திருஞானம், கிளார்க், நகராட்சி அலுவலகம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 20.09.2019-ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம். ஒட்டன்சத்திரம், தாராபுரம் ரோடு, அலுமினிய பேக்டரி சந்து, S.பாலசண்முகம் மகன் B. ராமச்சந்திரன், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கம்யூட்டர் மூலம் தயார் செய்த புகாரை காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, திண்டுக்கல் அவர்கள் பெற்று ஒப்புதல் செய்து கொடுத்த புகாரை நான் காலை 07.15 மணிக்கு பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: B. ராமச்சந்திரன், வயது 45/2019, த/பெ. S.பாலசண்முகம், அலுமினிய பேக்டரி சந்து, தாராபுரம் ரோடு, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். பெறுநர்: உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். அய்யா, நான் திண்டுக்கல் மாவட்டம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 20/9/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு B Ramchandran 20/9/2019

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.09.2019, 11.30 hrs.

Name: பெயர் I. ராஜேஸ்வரி,
Rank: நிலை ...............No. எண் .........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு,
திண்டுக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

<u>திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:5/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

ஒட்டன்சத்திரம் நகர், தாராபுரம் ரோடு, அலுமினியம் பேக்டரி சந்தில் உள்ள வீட்டில் என் குடும்பத்தாருடன் குடியிருந்து வருகிறேன். நான் +2 வரை படித்துள்ளேன். எனக்கு மனைவி R.நித்யா மற்றும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். நான் ஒட்டன்சத்திரம்- திண்டுக்கல் ரோட்டில் உள்ள மணியம் காம்ளக்ஸில் டிராவல் ஏஜென்ஸி வைத்து நடத்தி வருகின்றேன். நான் ஒட்டன்சத்திரம் - தாராபுரம் ரோட்டில் அரசு மருத்துவமனைக்கு எதிரில் உள்ள இருளக்குடும்பன்பட்டி, சூர்யா கார்டனில் மனை எண்.69ல் 1525 சதுர அடி மனையிடத்தினை கடந்த 2009ம் ஆண்டு எனது பெயரில் வாங்கினேன். அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 690 சதுர அடிக்கு கட்டிட அனுமதி உத்தரவு 11.01.2019ம். தேதி வாங்கினேன். அதன் பிறகு அந்த இடத்தில் நான் சுமார் 1000 சதுர அடியில் வீட்டை கட்டி முடித்து அதற்கு வரிவிதிப்பதற்காக 06.09.2019ம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு ஆணையாளர், ஒட்டன்சத்திரம் நகராட்சி அவர்களுக்கு வரி விதிப்பு வேண்டி எனது பெயரில் விண்ணப்பம் கொடுத்தேன். அதில் கிரைய பத்திர நகல், வில்லங் சான்று, காலி மனையிட வரி ரசீது நகல், கட்டிட வரைபட புளு பிரிண்ட் நகல் மற்றும் லேஅவுட் வரைபட நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அந்த விண்ணபத்தை நகராட்சியில் வருவாய் பிரிவில் இருந்த கிளார்க் திரு.கிருஷ்ணன் அவர்கள் பெற்றுக்கொண்டு விண்ணபத்தை சரிபார்த்தார். பின்னர் உங்களது வீட்டை அளந்த பிறகு தான் வரி நிர்ணயிக்க முடியும். அதற்கு முன்பு வீட்டு வரிரசீது போடுவதற்கு ரூபாய்.4,000/-ம் வேண்டும் என்று கேட்டார். நானும் அன்றைய தினம் ரசீதுக்காக ரூபாய்.4,000/-த்தை கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்ட கிளார்க் கிருஷ்ணன் ரசீது ஏதும் என்னிடம் கொடுக்கவில்லை. கேட்டதற்கு பிறகு தருகிறேன் என்று சொன்னார். மேலும் ஆபீஸ் செலவிற்கு ரூபாய்.10,000/-ம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை, குறைத்துச் சொல்லுங்கள் ஏற்பாடு செய்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்பு 12.09.2019ம் தேதி நான் வெளியில் சென்றிருந்த போது, காலை சுமார் 11.00 மணிவாக்கில் எங்களது புதிய வீட்டில் எனது மனைவி

மற்றும் பெயிண்டர்கள் இருந்தபோது கிளார்க் திரு.கிருஷ்ணன் மற்றும் ஒருவர் வந்து எங்களது வீட்டினை அளந்துவிட்டு சென்றார்கள். அதன்பிறகு எந்த தகவலும் இல்லாததால் சென்ற 18.09.2019ம் தேதி மதியம் சுமார் 1.00 மணி வாக்கில் நான் ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகம் சென்று கிளார்க் திரு.கிருஷ்ணன் அவர்களை பார்த்து எனது வீட்டின் வரி விதிப்பு விண்ணப்பம் பற்றி கேட்க, அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூபாய்.10,000/- என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான், மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் இதற்கு மேல் குறைக்க முடியாது, உங்கள் வீட்டிற்கு முறையாக வரி போட்டால் அதிகமாக வரும், நான் வரியை குறைச்சு போடுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நானும் சரிங்க சார், பிறகு வந்து பார்க்கிறேன் என்று சொல்லி வந்துவிட்டேன். அதன்பிறகு 19.09.2019ம் தேதி மதியம் சுமார் 2.00 மணி வாக்கில் நான் ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகத்திற்கு கிளார்க் திரு.கிருஷ்ணன் அவர்களை பார்க்க சென்றேன். அவர் அங்கு இல்லாததால் உடனே எனது செல்போன் நம்பர். 9443659113லிருந்து நான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த திரு.கிருஷ்ணன் அவர்களின் செல்போன் நம்பர். 7373735811க்கு அழைத்தேன். அப்போது அவர் பஸ்டாண்ட் பக்கத்தில் இருப்பதாகவும், கிங்ஸ் பேக்கரி பக்கம் வரும்படியும் சொன்னார். அதன்படி நான் கிங்ஸ் பேக்கரிக்கு மதியம் சுமார் 2.15 மணிக்கு சென்று அவரை பார்த்து எனது வீட்டு வரி சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் முதலில் நான் கேட்ட பணம் ரெடியாகிவிட்டதா எனக் கேட்டார். அதற்கு நான் எனது கஷ்டத்தினை சொல்லி மீண்டும் குறைத்துக் கொள்ளும்படி கேட்டேன். அதற்கு அவர் நிறைய செலவுகள் இருக்கிறது, புரியாத ஆளா இருக்கிறாய், என்று சொல்லி ஏற்கனவே கேட்ட பணத்தினை குறைத்து ரூபாய்.6,000/-த்தை நாளை 20.09.2019ம் தேதி மதியத்திற்குள் அவரது அலுவலகத்தில் வந்து கொடுக்கவேண்டும், அப்பத்தான் உங்கள் வீட்டிற்கான வரிவிதிப்பு வேலை நடக்கும், இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான் என்று கராராக சொன்னார். அதன் பிறகு நானும் வேறு வழியில்லாமல் வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் நான் புதிதாக கட்டிய வீட்டிற்கு வரி விதிப்பு ஏற்பாடு செய்ய ஒட்டன்சத்திரம் நகராட்சி கிளார்க் திரு.கிருஷ்ணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூபாய்.6,000/- ம் கொடுத்து

வரிவிதிப்பு பெற மனமில்லாததால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் அளிக்கிறேன். மேலும் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூபாய்.6,000/-த்தை வைத்திருக்கிறேன். இத்துடன் என்பெயரில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கொடுக்கப்பட்ட கட்டிட அனுமதி உத்தரவின் நகல் நாள்-11.01.2019, அதற்காக செலுத்தப்பட்ட ரூபாய்.23,200/- மற்றும் தொழிலாளர் நலநிதி ரூபாய்.10,000/-ம் ஆகியவற்றை சேர்த்து கொடுக்கப்பட்ட 01.01.2019ம் தேதியிட்ட ரசீதின் நகல், எனது வீட்டு மனையிடத்தை முறைபடுத்திய உத்தரவு நாள்-24.08.2018ன் நகல், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் மேற்படி எனது காலி மனையிடத்திற்கு கட்டிய வரி ரூ.2,171/-க்கான ரசீது நகல், எனது வீடு அமைந்துள்ள இடத்திற்கான லேஅவுட் வரைபட நகல் மற்றும் மேற்படி வீட்டின் கட்டிட வரைபட புளு பிரிண்ட் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (B. Ramachandran 20.09.2019)

20.09.2019/07.00hrs, Received the Complaint, Inspector Tmt.I.Rajeswari register a case. Sd/-xxxxx (J.Nagarajan, DSP, V&AC, Dindigul 20.09.2019)

Sir, Received the complaint on 20.09.2019 at 07.15 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources, complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.05/2019, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 20.09.2019 at 09.00 hrs and took up investigation.

Original FIR along with Computer typed complaint of Tr.B.Ramachandran, S/o.S.Balashanmugam, Aluminiya Factory lane, Dharapuram Road, Oddanchatram. Dindigul District and with the relevant documents is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

20/9/19.

(I.Rajeswari)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.